# விக்டோரியாவின் புதிய குழந்தைப் பாதுகாப்புத்

What's new?
Overview of the new Child Safe Standards

Tamil

# புதியவை என்ன?

## புதிய குழந்தைப் பாதுகாப்புத் தரநிலைகள் பற்றிய மேலோட்டப் பார்வை

குழந்தைப் பாதுகாப்புத் தரநிலைகள் (தரநிலைகள்) விக்டோரியாவில் ஜனவரி 2016-இல் தொடங்கப்பட்டது. ஐந்து வருடங்களுக்குப் பிறகு, குழந்தைகள் மற்றும் இளவயதினரின் பாதுகாப்பைத் தரநிலைகள் எப்படி மேம்படுத்தியுள்ளன எனப் பார்த்தோம்.

எங்களின் தரநிலைகளை மேலும் வலுவாக்கும்பொருட்டு மாற்றங்களைச் செய்துவருகிறோம்.

தரநிலைகளுக்கு[1] உட்பட்ட நிறுவனங்கள், **ஜூலை 1, 2022** முதல் புதிய தரநிலைகளுக்கு இணங்கிச் செயல்பட வேண்டும். அதுவரை தற்போது இருக்கும் தரநிலைகளே செயலில் இருக்கும்.

புதிய தரநிலைகளில் குறைந்தபட்சத் தேவைகள் அமைக்கப்பட்டுள்ளன, அத்துடன் நிறுவனங்கள் குழந்தைகளையும் இளவயதினரையும் பாதுகாப்பாக வைத்துக்கொள்வதற்குக் கண்டிப்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளும் வழங்கப்பட்டுள்ளன. அவை நிறுவனங்களுக்கு அதிகளவிலான தெளிவுத்தன்மையை வழங்குவதுடன், ஆஸ்திரேலியாவின் பிற பகுதிகளில் உள்ள தரநிலைகளுடனும் மிகவும் உடன்படுகின்றன.

குழந்தைகளையும் இளவயதினரையும் பாதுகாப்பாக வைத்துக்கொள்வதற்கு நிறுவனங்கள் ஏற்கனவே பின்பற்றும் நடவடிக்கைகளும் புதிய தரநிலைகளுக்கு உட்பட்டு நடப்பதற்கு உதவும். சில பகுதிகளில் நிறுவனங்கள் புதிய தரநிலைகளை முழுவதுமாகப் பின்பற்ற, தங்களின் தற்போதைய குழந்தைப் பாதுகாப்புக் கொள்கை, நடைமுறைகள் மற்றும் நிறுவனக் கலாச்சாரத்தை மாற்ற அல்லது மேம்படுத்த வேண்டியிருக்கும்.

[1] ‘தொடர்புடைய நிறுவனங்கள்’ என்பதற்கான அனைத்துக் குறிப்புகளும் இந்த ஆவணத்தில் அணுகல்தன்மைக் காரணங்களுக்காக ‘நிறுவனம்/கள்’ என மாற்றப்பட்டுள்ளன. தொடர்புடைய நிறுவனம் என்ன என்பது குழந்தை நல்வாழ்வு மற்றும் பாதுகாப்புச் சட்டம் 2005-இன் பிரிவு 3(1)-இல் வரையறுக்கப்பட்டுள்ளது, மேலும் அந்த நிறுவனங்கள் குழந்தைப் பாதுகாப்புத் தரநிலைகளுக்கு உட்பட்டவையாகும்.

COMMISSION FOR CHILDREN AND YOUNG PEOPLE

நிறுவனங்கள் புதிய தரநிலைகளைப் பற்றி தெரிந்துகொள்வதற்கும், புதிய தரநிலைகளுடன் இணங்குவதற்காகத் தாங்கள் மேற்கொள்ள வேண்டிய புதிய நடவடிக்கைகளை அடையாளங்காணும்வகையில் தங்களின் குழந்தைகள் பாதுகாப்புக் கொள்கைகள், செயல்முறைகள் மற்றும் நடைமுறைகளை மதிப்பாய்வு செய்வதற்கும் இந்த வழிகாட்டி உதவும். *என்ன மாற்றப்பட்டுள்ளது?நடப்பு மற்றும் புதிய குழந்தைப் பாதுகாப்புத் தரநிலைகளை ஒப்பிடுதல்* மற்றும் கமிஷனின் *அடிக்கடிக் கேட்கப்படும் கேள்விகள்* ஆகிய வழிகாட்டிகளும் உதவியாக இருக்கக்கூடும்.

அமைப்புகளுக்கு உதவும் வகையில் கூடுதல் தகவலும் வழிகாட்டுதலும் இனிவரும் மாதங்களில் வழங்கப்படும், கமிஷனானது புதிய தகவலையும் வழிகாட்டுதலையும் வெளியிடும்போது அதுகுறித்த மின்னஞ்சல்களைப் பெற இங்கே குழுசேரவும்.

கீழே உள்ள அட்டவணையில், புதிய தரநிலைகளில் உள்ள புதிய தேவைகளின் சுருக்கவிவரம் வழங்கப்பட்டுள்ளது.

| புதிய குழந்தைப் பாதுகாப்புத் தரநிலைகள் (ஜூலை 1, 2022 முதல் நடைமுறைக்கு வருகிறது) | புதியவை என்ன அல்லது என்ன மாற்றப்பட்டுள்ளது? | பயனுள்ள ஆதாரங்கள் |
|---|---|---|

| | | |
|---|---|---|
| **குழந்தைப் பாதுகாப்புத் தரநிலை 1 - பழங்குடி குழந்தைகள் மற்றும் இளவயதினரின் மாறுபட்ட மற்றும் தனித்துவமான அடையாளங்களும் அனுபவங்களும் மதிக்கப்பட்டு மரியாதை அளிக்கும் வகையில் கலாச்சாரம் சார்ந்த பாதுகாப்பு சூழ்நிலையை நிறுவனங்கள் அமைக்க வேண்டும்**<br><br>குழந்தைப் பாதுகாப்புத் தரநிலை 1 உடன் இணங்க, நிறுவனம் குறைந்தபட்சம் இவற்றை உறுதிசெய்ய வேண்டும்:<br><br>1.1 குழந்தை தனது கலாச்சாரத்தை வெளிப்படுத்துவதையும் தனது கலாச்சார உரிமைகளைப் பின்பற்றி மகிழ்வதையும் ஊக்கப்படுத்த வேண்டும், ஆதரிக்க வேண்டும்.<br><br>1.2 நிறுவனத்திற்குள் அமைக்கப்பட்டிருக்கும் உத்திகள் எல்லா உறுப்பினர்களும் பழங்குடியினரின் கலாச்சாரத்தை ஏற்றுக்கொண்டு அவற்றின் வலிமையை ஊக்கப்படுத்தும் விதமாகவும், பழங்குடியினக் குழந்தைகள் மற்றும் இளவயதினரின் நல்வாழ்வு மற்றும் பாதுகாப்பின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ளும்விதமாகவும் இருக்க வேண்டும்.<br><br>1.3 நிறுவனத்திற்குள் இனவாதம் ஏதேனும் நடந்தால் அதை அடையாளங்காண்பது, தவிர்ப்பது மற்றும் பொறுத்துக்கொள்ளாமல் அதற்கான நடவடிக்கை எடுப்பது ஆகியவற்றை உறுதிப்படுத்தும் வகையில் நிறுவனத்தில் செயல்கள் இருக்க வேண்டும். இனவாதம் ஏதேனும் நடந்தால் அவை அடையாளங்காணப்பட்டு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>1.4 பழங்குடியினரின் குழந்தைகள், இளவயதினர் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் நிறுவன நிகழ்ச்சிகளில் பங்கேற்பதையும் செயல்படுவதையும் நிறுவனம் முழு முனைப்புடன் ஆதரிக்கவும் எளிதாக்கவும் வேண்டும்.<br><br>1.5 நிறுவனத்தின் கொள்கைகள், நடைமுறைகள், சிஸ்டம்கள், செயல்முறைகள் ஆகிய அனைத்தும் கலாச்சார ரீதியாகப் பாதுகாப்பாகவும் எல்லாக் கலாச்சாரங்களையும் வெளிப்படுத்தும் சூழலாகவும் | புதிய குழந்தைப் பாதுகாப்புத் தரநிலை 1-இன் படி, பழங்குடியினர் குழந்தைகள் மற்றும் இளவயதினருக்குக் கலாச்சார ரீதியான பாதுகாப்புச் சூழலை உருவாக்குவதற்கான புதிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். நிறுவனங்கள் தற்போது பழங்குடியினக் குழந்தைகள் மற்றும் இளவயதினர் தங்களின் சேவைகள் அல்லது வசதிகளைப் பயன்படுத்துகிறீர்கள் என்பதைத் தெரிந்திருந்தாலும் சரி தெரியாமல் இருந்தாலும் சரி இந்தத் தேவையை நிறுவனங்கள் பூர்த்திசெய்ய வேண்டும்.<br><br>இந்தப் புதிய குழந்தைப் பாதுகாப்புத் தரநிலை 1-இன் படி, பழங்குடியினக் குழந்தைகள், இளவயதினர் மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்குப் பாதுகாப்பான சூழலை உருவாக்குவதற்குத் தற்போதைய அணுகுமுறையை பெரும்பாலான நிறுவனங்கள் மேம்படுத்த வேண்டும். இந்தத் தரநிலையைச் செயல்படுத்துவதற்குத் தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டும், ஒரு முயற்சியில் கிட்டாது.<br><br>இந்தத் தரநிலையானது புதிய தரநிலை 5 உடன் தொடர்புடையது, இதற்கு சமநிலை உறுதிப்படுத்தப்பட வேண்டும், மேலும் வேற்றுமை தொடர்பான தேவைகளானவை நிறுவனங்களில் மரியாதை அளிக்கப்பட வேண்டும். | இந்தப் புதிய குழந்தைப் பாதுகாப்புத் தரநிலை 1-இன் உடன் இணங்குவதற்காக நிறுவனங்களுக்கு உதவும் வகையில் அதற்காகவே அர்ப்பணிக்கப்பட்ட புதிய ஆதாரங்களை கமிஷன் உருவாக்குகிறது.<br><br>குழந்தைப் பாதுகாப்புச் சூழல்களை உருவாக்கும்பொருட்டு பழங்குடியினர் மற்றும் டோரஸ் ஸ்ட்ரேட் தீவைச் சார்ந்த குழந்தைகள், இளவயதினர், சமூகங்கள் ஆகியோருடன் பணிபுரியும் நிறுவனங்களை ஆதரிப்பதற்கு செக்ரிட்ரேட் ஆஃப் நேஷனல் அப்ஒரிஜினல் அண்ட் ஐலேண்டர் சைல்டு கேர் (SNAICC) ஆனது ஆதாரவளங்களை உருவாக்கியுள்ளது.<br><br>குழந்தைகளுக்கான பாதுகாப்பை வழங்கும் நிறுவனத்தை உருவாக்குவதற்கான கமிஷனின் வழிகாட்டியில் உள்ள குழந்தைப் பாதுகாப்பு நிறுவனத்தை உருவாக்குவது குறித்த வழிகாட்டி எனும் பிரிவில் தொடர்புடைய பிற வழிகாட்டுதலும் உள்ளன. |

| **புதிய குழந்தைப் பாதுகாப்புத் தரநிலைகள் (ஜூலை 1, 2022 முதல் நடைமுறைக்கு வருகிறது)** | **புதியவை என்ன அல்லது என்ன மாற்றப்பட்டுள்ளது?** | **பயனுள்ள ஆதாரங்கள்** |
|---|---|---|
| உருவாக்க வேண்டும், மேலும் பழங்குடியினக் குழந்தைகள், இளவயதினர் மற்றும் அவர்களின் குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்திசெய்ய வேண்டும். | | |

| | | |
|---|---|---|
| **குழந்தைப் பாதுகாப்புத் தரநிலை 2 - குழந்தைகள் பாதுகாப்பும் நல்வாழ்வும் நிறுவனத்தின் தலைமை, நிர்வாகம் மற்றும் கலாச்சாரம் ஆகியவற்றில் உள்ளமைக்கப்பட்டிருக்க வேண்டும்**<br><br>குழந்தைப் பாதுகாப்புத் தரநிலை 2 உடன் இணங்க, நிறுவனம் குறைந்தபட்சம் இவற்றை உறுதிசெய்ய வேண்டும்:<br><br>2.1 நிறுவனமானது குழந்தைப் பாதுகாப்பிற்கான உறுதிமொழியை பொதுவில் மேற்கொள்கிறது.<br><br>2. 2 உயர்மட்டக் குழுவிலிருந்து அடிமட்டக் குழு வரை என நிறுவனத்தின் எல்லா நிலைகளிலும் குழந்தைப் பாதுகாப்புக் கலாச்சாரத்திற்கு ஆதரவளித்து பின்பற்றுகின்றன.<br><br>2.3 அரசாங்க ஏற்பாடுகள் எல்லா நிலைகளிலும் குழந்தைப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக் கொள்கையைச் செயல்படுத்த உதவுகின்றன.<br><br>2.4 நடத்தை விதித் தொகுப்பானது பணியாளர்கள் மற்றும் தன்னாவலர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படும் நடத்தைத் தரநிலைகள் மற்றும் பொறுப்புகள் குறித்த வழிகாட்டுதல்களை வழங்குகிறது.<br><br>2.5 இடர் மேலாண்மை யுத்திகளானவை குழந்தைகள் மற்றும் இளவயதினருக்கும் ஏற்படும் ஆபத்துகளைத் தடுப்பது, அடையாளம் காண்பது, குறைப்பது ஆகியவற்றில் கவனம்செலுத்துகின்றன.<br><br>2.6 பணியாளர்கள், தன்னார்வலர்கள் ஆகியோர் தகவல் பரிமாற்றம் மற்றும் பதிவுப் பராமரிப்பு ஆகியவற்றைப் பற்றிய தங்கள் கடமைகளைப் புரிந்துகொள்கிறார்கள். | புதிய குழந்தைப் பாதுகாப்புத் தரநிலை 2-ன் பல அம்சங்களும் நடப்பில் உள்ள தரங்கள் 1, 2 மற்றும் 3-ன் கீழ் நிறுவனங்கள் தற்போது செய்துகொண்டிருப்பதுடன் ஒத்துப்போகின்றன.<br><br>நிறுவனத்தின் எல்லா நிலைகளையிலும் குழந்தைப் பாதுகாப்பிற்கான கலாச்சாரத்தை உருவாக்க, தகவல் பரிமாற்றம், பதிவுப் பராமரிப்பு மற்றும் அரசாங்க ஏற்பாடுகள் ஆகியவை புதிய குழந்தைப் பாதுகாப்புத் தரநிலை 2-இல் அதிக முக்கியத்துவம் பெற்றுள்ளன. குழந்தைகளுக்கான இடர்களை நிர்வகிக்கும் மேலாண்மையானது நிறுவனத் தலைமை, அரசாங்கம் மற்றும் கலாச்சாரத்தில் பயன்படுத்தப்பட வேண்டும். | தற்போதைய தரநிலைகள் 1, 2 அல்லது 3-இன் பிரிவுகளில் உள்ள கமிஷனின் குழந்தைப் பாதுகாப்பு நிறுவனத்தை உருவாக்குவது குறித்த வழிகாட்டியில் தொடர்புடைய பிற வழிகாட்டுதலும் உள்ளன.<br><br>நியூ சவுத் வேல்ஸ் அலுவலகத்தின் குழந்தைகளின் பாதுகாவலருக்கான நடத்தை விதித்தொகுப்பு: குழந்தைப் பாதுகாப்பு நடத்தை விதித்தொகுப்பை மேம்படுத்தும் வழிகாட்டியானது, குழந்தைப் பாதுகாப்பு நடத்தை விதித்தொகுப்பை மேம்படுத்துவது குறித்த விரிவான ஆலோசனையை வழங்கிறது.<br><br>ஆஸ்திரேலிய மனித உரிமைகள் ஆணையத்தின் தேசியக் கொள்கை 1 குறித்த மின்-கற்றல் தொகுதியில் பயனுள்ள ஆலோசனை வழங்குகிறது மற்றும் அவற்றைக் குழந்தைப் பாதுகாப்பு நிறுவனங்களின் மின்-கற்றல் தளங்கள் மூலமாகவும் அணுக முடியும். |

| | | |
|---|---|---|
| **குழந்தைப் பாதுகாப்புத் தரநிலை 3 - குழந்தைகள் மற்றும் இளவயதினர் தங்களின் உரிமைகள், அவர்களைப் பாதிக்கும் முடிவுகளில் பங்கேற்பது ஆகியவை குறித்து உறுதியாக இருக்க வேண்டும், இவை தீவிரமான விஷயங்களாக எடுக்கப்பட வேண்டும்**<br><br>குழந்தைப் பாதுகாப்புத் தரநிலை 3 உடன் இணங்க, நிறுவனம் குறைந்தபட்சம் இவற்றை உறுதிசெய்ய வேண்டும்:<br><br>3.1 குழந்தைகள் மற்றும் இளவயதினருக்கு பாதுகாப்பு, தகவல் மற்றும் பங்கேற்பு ஆகியவை உட்பட அவர்களின் அனைத்து உரிமைகள் குறித்தும் தெரிவிக்கப்பட வேண்டும்.<br><br>3.2 குழந்தைகள் மற்றும் இளவயதினர் பாதுகாப்பாக உணர்வதற்கும் தனிமைப்படுத்தப்படவில்லை என்ற எண்ணம் வருவதற்கும் நட்பின் முக்கியத்துவம் அடையாளங்காணப்பட வேண்டும் மற்றும் சகாக்களின் ஆதரவும் ஊக்கவிக்கப்பட வேண்டும்.<br><br>3.3 அமைப்பு அல்லது சூழ்நிலைக்கு பொருத்தமான இடத்தில், குழந்தைகள் மற்றும் இளவயதினருக்கு பாலியல் வன்கொடுமைக்கு எதிரான பாதுகாப்பு நிகழ்ச்சிகளும், அவரவர் வயதுக்கு ஏற்ற பொருத்தமான தகவல்களும் வழங்குவதற்கு வழிவகுக்க வேண்டும்.<br><br>3.4 குழந்தைகள் மற்றும் இளவயதினர் தங்களின் எண்ணங்களை வெளிப்படுத்துவதற்கும் முடிவெடுப்பதற்கும் தங்களின் பிரச்சனைகளைச் சொல்வதற்கும் ஏற்ற குழந்தைகள் எளிதாக அணுகும் வகையிலான வழிகளையும் அவர்களுக்குப் பிறர் தீங்கிழைத்தால் அதற்கான அடையாளங்களையும் பணியாளர்களும் தன்னார்வலர்களும் அறிந்துகொள்ள வேண்டும்.<br><br>3.5 பங்கேற்பை எளிதாக்கும் வகையிலும் குழந்தைகள் மற்றும் இளவயதினர் தரும் உள்ளீட்டிற்கு பதிலளிக்கும் வகையிலும் கலாச்சாரத்தை உருவாக்குவதற்கான யுத்திகளை நிறுவனங்கள் கொண்டிருக்க வேண்டும். | குழந்தைப் பாதுகாப்புத் தரநிலைகளின்படி குழந்தைகள் மற்றும் இளவயதினரை அங்கீகரிப்பதற்கும் அவர்களின் பங்களிப்பை மேம்படுத்துவதற்கும் வகையிலான யுத்திகளை நிறுவனங்கள் கண்டிப்பாகக் கொண்டிருக்க வேண்டும். இந்தக் கடமைகளும் உள்ளன.<br><br>புதிய குழந்தைப் பாதுகாப்புத் தரநிலை 3-இன் கீழ், நிறுவனங்களுக்கான கூடுதல் தேவைகளில் உள்ளடங்குபவை:<br>• குழந்தைகள் மற்றும் இளவயதினருக்கு அவர்களின் உரிமைகளைப் பற்றி தெரிவிப்பது.<br>• குழந்தைகள் மற்றும் இளவயதினர் பாதுகாப்பாகவும் பிறருடன் இணைந்திருப்பதாகவும் உணர வைப்பதற்கு நட்பின் முக்கியத்துவம் அடையாளங்காண்பது மற்றும் நண்பர்களிடம் ஆதரவை ஊக்குவிப்பது<br>• பணியாளர்களும் தன்னார்வலர்களும் குழந்தைகளுக்குப் பிறர் தீங்கிழைக்கும்போது அவற்றுக்கான அடையாளங்களைக் கண்டறியும்படி பயிற்சி வழங்குவது<br>• பாலியல் வன்கொடுமைக்கு எதிரான பாதுகாப்பு நிகழ்ச்சிகளை குழந்தைகளுக்கும் இளவயதினருக்கும் வழங்குவது. | கமிஷனின் வலிமைபெறுதல் மற்றும் பங்கேற்பு: குழந்தைகள் மற்றும் இளவயதினருடன் பணிபுரியும் நிறுவனங்களுக்கான வழிகாட்டி. இது வலிமைபெறுதல் மற்றும் பங்கேற்பு பற்றிய நடைமுறை சார்ந்த மற்றும் அணுகத்தக்க வழிகாட்டுதல்களையும் அவற்றை எப்படி நடைமுறைப்படுத்துவது என்பது பற்றிய தகவல்களை நிறுவனங்களுக்கு வழங்குகிறது.<br><br>குழந்தைகளின் உரிமை தொடர்பான ஐக்கிய நாடுகள் மாநாட்டில் குழந்தைகளுக்கான பல உரிமைகள் நிலைநிறுத்தப்பட்டுள்ளன. ஐக்கிய நாடுகள் ஓர் எளிமையாக்கிய பதிப்பை வெளியிட்டுள்ளது.<br><br>கல்வி மற்றும் பயிற்சித் துறையின் பள்ளிகளுக்கான வழிகாட்டிதலில் தவறாகப் பயன்படுத்துவது தொடர்பான பல்வேறு வகைகளின் அறிகுறிகள் பற்றிய பயனுள்ள தகவல்கள் உள்ளன.<br><br>தற்போதைய தரநிலை 7-இன் பிரிவில் உள்ள கமிஷனின் குழந்தைப் பாதுகாப்பு நிறுவனத்தை உருவாக்குவது குறித்த வழிகாட்டியில் தொடர்புடைய பிற வழிகாட்டுதலும் உள்ளன.<br><br>ஆஸ்திரேலிய மனித உரிமைகள் ஆணையத்தின் தேசியக் கொள்கை 2 குறித்த மின்-கற்றல் தொகுதியில் பயனுள்ள ஆலோசனை வழங்குகிறது மற்றும் அவற்றைக் குழந்தைப் பாதுகாப்பு நிறுவனங்களின் மின்-கற்றல் தளங்கள் மூலமாகவும் அணுக முடியும். |

| **புதிய குழந்தைப் பாதுகாப்புத் தரநிலைகள் (ஜூலை 1, 2022 முதல் நடைமுறைக்கு வருகிறது)** | **புதியவை என்ன அல்லது என்ன மாற்றப்பட்டுள்ளது?** | **பயனுள்ள ஆதாரங்கள்** |
|---|---|---|
| 3.6 குழந்தைகள் மற்றும் இளவயதினர் பங்கேற்பதற்கும், அவர்களின் பங்களிப்பை ஊக்கவிப்பதற்கும் நிறுவனங்கள் வாய்ப்புகளை வழங்க வேண்டும். இதன் மூலம் அவர்களின் ஈடுபாடு மற்றும் நம்பிக்கை அதிகரிக்கும். | | |

| புதிய குழந்தைப் பாதுகாப்புத் தரநிலைகள் (ஜூலை 1, 2022 முதல் நடைமுறைக்கு வருகிறது) | புதியவை என்ன அல்லது என்ன மாற்றப்பட்டுள்ளது? | பயனுள்ள ஆதாரங்கள் |
|---|---|---|
| **குழந்தைப் பாதுகாப்புத் தரநிலை 4 - குடும்பங்கள் மற்றும் சமுதாயத்தினர் குழந்தைப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துவது குறித்து தெரிவிக்கப்பட்டு அதில் ஈடுபட வேண்டும்**<br>குழந்தைப் பாதுகாப்புத் தரநிலை 4 உடன் இணங்க, நிறுவனம் குறைந்தபட்சம் இவற்றை உறுதிசெய்ய வேண்டும்:<br>4.1 குடும்பங்கள் அவர்களின் குழந்தைகள் தொடர்பான முடிவுகளை எடுப்பதில் பங்கேற்க வேண்டும்.<br>4.2 நிறுவனமானது குழந்தைகளின் பாதுகாப்பு அணுகுமுறை மற்றும் தொடர்புடைய தகவல்களை அணுகக்கூடியது ஆகியவை பற்றி குடும்பங்கள் மற்றும் சமூகத்துடன் வெளிப்படையாக தொடர்பு கொள்ள வேண்டும்.<br>4.3 நிறுவனத்தின் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளின் வளர்ச்சி மற்றும் மதிப்பாய்வில் குடும்பத்தினர் மற்றும் சமூகத்தினரின் கருத்தைப் பெற வேண்டும்.<br>4.4 குடும்பங்கள், பராமரிப்பாளர்கள் மற்றும் சமுதாயத்திற்கு நிறுவனத்தின் செயல்பாடுகள் மற்றும் ஆளுகை குறித்து தெரிவிக்கப்பட வேண்டும். | தற்போதைய குழந்தைப் பாதுகாப்புத் தரநிலைகளுக்கு இணங்குவதற்கான ஒரு பகுதியாக பல நிறுவனங்கள் ஏற்கனவே குடும்பங்கள் மற்றும் சமுதாயத்திற்கு தகவல் அளித்துள்ளன.<br>புதிய குழந்தைப் பாதுகாப்புத் தரநிலை 4 ஆனது குழந்தைகள் பாதுகாப்பை மேம்படுத்துவதில் குடும்பங்கள் மற்றும் சமூகங்களை ஈடுபடுத்துவதற்கான குறிப்பிட்ட கடமைகளை உருவாக்குகிறது.<br>புதிய கடமைகள் என்பது நிறுவனங்கள் அவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதாகும்:<br>• குழந்தைகள் மற்றும் இளவயதினர் தொடர்பான முடிவுகளில் குடும்பங்கள் மற்றும் சமுதாயத்தின் உள்ளீட்டைப் பெறுதல்<br>• குழந்தைப் பாதுகாப்புக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளின் வளர்ச்சி மற்றும் மதிப்பாய்வில் குடும்பங்கள் மற்றும் சமூகங்களை ஈடுபடுத்துதல்<br>• குழந்தைப் பாதுகாப்பு அக்கறையை எவ்வாறு மேம்படுத்துவது மற்றும் நிறுவனம் எவ்வாறு செயல்படுகிறது என்பது குறித்து குடும்பங்கள் மற்றும் சமூகங்களுடன் திறம்பட தொடர்பு கொள்ளுதல்<br>• குடும்பங்களின் பன்முகத்தன்மையை கணக்கில் எடுத்துக்கொள்வதோடு, சேர்ப்பதற்கான தடைகளை குறைக்கச் செயல்படுதல். | குடும்பங்கள் மற்றும் சமுதாயங்கள் ஈடுபடுத்துவது நல்ல பழக்கம் என ஏற்கனவே குழந்தைப் பாதுகாப்பு நிறுவனங்களை உருவாக்குவது குறித்த வழிகாட்டியில் கொடுக்கப்பட்டுள்ளது.<br>ஆஸ்திரேலிய மனித உரிமைகள் ஆணையத்தின் தேசியக் கொள்கை 3 குறித்த மின்-கற்றல் தொகுதியில் பயனுள்ள ஆலோசனை வழங்குகிறது மற்றும் அவற்றைக் குழந்தைப் பாதுகாப்பு நிறுவனங்களின் மின்-கற்றல் தளங்கள் மூலமாகவும் அணுக முடியும். |

| | | |
|---|---|---|
| **குழந்தைப் பாதுகாப்புத் தரநிலை 5 - கொள்கையிலும் செய்முறையிலும் சமநிலை பின்பற்றப்பட வேண்டும் மற்றும் வேற்றுமை மதிக்கப்பட வேண்டும்**<br><br>குழந்தைப் பாதுகாப்புத் தரநிலை 5 உடன் இணங்க, நிறுவனம் குறைந்தபட்சம் இவற்றை உறுதிசெய்ய வேண்டும்:<br><br>5.1 பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்கள் உள்பட நிறுவனமானது குழந்தைகள் மற்றும் இளவயதினரின் மாறுபட்ட சூழ்நிலைகளைப் புரிந்துகொண்டு பாதிக்கக்கூடியவர்களுக்கு பதிலளித்து, ஆதரவை வழங்க வேண்டும்.<br><br>5.2 குழந்தைகள் மற்றும் இளவயதினர் கலாச்சாரப் பாதுகாப்பு, அணுகக்கூடிய மற்றும் எளிதான வழிகளில் புரிந்துகொள்ள தகவல், ஆதரவு மற்றும் புகார்கள் செயல்முறைகளை அணுகும் வகையில் இருக்க வேண்டும்.<br><br>5.3 குறைபாடு உடைய குழந்தைகள் மற்றும் இளவயதினர், கலாச்சாரம் மற்றும் மொழி ரீதியிலான வேறுபட்ட பின்னணியில் இருந்து வரும் குழந்தைகள் மற்றும் இளவயதினர், இவர்களில் வீட்டில் வசிக்கமுடியதவர்கள், பெண்பால் ஓரினச்சேர்க்கை, ஆண்பால் ஓரினச் சேர்க்கை, இருபாலின, திருநங்கை, இடைப்பாலின குழந்தைகள் மற்றும் இளவயதினரின் தேவைகளுக்கு நிறுவனம் தனிக் கவனத்தைச் செலுத்த வேண்டும்.<br><br>5.4 பழங்குடியினக் குழந்தைகள் மற்றும் இளவயதினர், அவர்களுக்கான கலாச்சார ரீதியிலான பாதுகாப்புச் சூழ்நிலையை வழங்குவது/ஊக்குவிப்பது போன்ற தேவைகளுக்கு நிறுவனம் தனிக் கவனத்தைச் செலுத்த வேண்டும். | குழந்தைப் பாதுகாப்புத் தரநிலைகளானவை நிறுவனங்கள் எப்போதும் பன்முகத்தன்மையை அடையாளம் கண்டு பதிலளிக்க வேண்டும் மற்றும் துஷ்பிரயோகத்தினால் சில குழந்தைகள் மற்றவர்களை விட அதிகம் பாதிப்பிற்கு உள்ளாகலாம் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். இன்றைய தேதி வரை பழங்குடியினக் குழந்தைகளின் கலாச்சாரப் பாதுகாப்பு, கலாச்சார மற்றும்/அல்லது மொழி ரீதியிலான வேறுபட்ட குழந்தைகள் மற்றும் குறைபாடு உடைய குழந்தைகளின் பாதுகாப்பு தொடர்பானவை மூன்று கொள்கைகள் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.<br><br>இந்தக் கடமைகள் தொடர்கின்றனர், ஆனால் புதிய குழந்தைப் பாதுகாப்புத் தரநிலை 5-இல் சில கூடுதலான கடமைகளை நிறுவனங்கள் பின்பற்ற வேண்டும்:<br>• குழந்தைகள் மற்றும் இளைஞர்களின் வேறுபட்ட பின்னணிகள், சூழ்நிலைகள் மற்றும் தேவைகளைப் புரிந்துகொள்ளுதல்<br>• குழந்தைகள் மற்றும் இளவயதினர் அனைவருக்கும் தேவையான சீரமைப்புகளைச் செய்தல் மற்றும் சம அளவு பாதுகாப்பை அளித்தல்<br>• வீட்டில் வசிக்கமுடியாத குழந்தைகள் மற்றும் இளவயதினர், அதேபோல் பெண்பால் ஓரினச்சேர்க்கை, ஆண்பால் ஓரினச் சேர்க்கை, இருபாலின, திருநங்கை, இடைப்பாலின குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் ஆகியோரின் தேவைகளைக் கருத்தில்கொள்ளுதல்<br><br>குழந்தைகளின் மாறுபட்ட சூழ்நிலைகளைப் புரிந்துகொள்வது குறித்து புதிய தரநிலைகள் கவனம் செலுத்துவதால், திருநங்கை மற்றும் வெவ்வேறு பாலின அடையாளங்களுடன் கூடிய குழந்தைகளின் தேவைகளுக்கும் நிறுவனங்கள் கவனம் செலுத்த வேண்டும்.<br><br>இந்தத் தரநிலையானது புதிய தரநிலை 1 உடன் பொருந்துகிறது, இதன்படி பழங்குடி குழந்தைகள் மற்றும் இளவயதினரின் மாறுபட்ட மற்றும் தனித்துவமான அடையாளங்களும் அனுபவங்களும் மதிக்கப்பட்டு மரியாதை அளிக்கும் வகையில் கலாச்சாரம் சார்ந்த | கமிஷனின் குழந்தைப் பாதுகாப்பு நிறுவனத்தை உருவாக்குவது குறித்த வழிகாட்டியில் மாறுபட்ட குழுக்களின் இளைஞர்கள், குறிப்பாக பழங்குடியினக் குழந்தைகள், கலாச்சாரரீதியாக மற்றும்/அல்லது மொழிரீதியாக வேறுபட்டிருக்கும் குழந்தைகள், உடல்குறைபாடு உள்ள குழந்தைகள் ஆகியோரின் தேவைகளை ஆதரிக்கும் வகையில் சில பயனுள்ள வழிகாட்டுதல்களை வழங்கிறது.<br><br>ஆஸ்திரேலிய மனித உரிமைகள் ஆணையத்தின் தேசியக் கொள்கை 4 குறித்த மின்-கற்றல் தொகுதியில் பயனுள்ள ஆலோசனை வழங்குகிறது மற்றும் அவற்றைக் குழந்தைப் பாதுகாப்பு நிறுவனங்களின் மின்-கற்றல் தளங்கள் மூலமாகவும் அணுக முடியும். |

| **புதிய குழந்தைப் பாதுகாப்புத் தரநிலைகள் (ஜூலை 1, 2022 முதல் நடைமுறைக்கு வருகிறது)** | **புதியவை என்ன அல்லது என்ன மாற்றப்பட்டுள்ளது?** | **பயனுள்ள ஆதாரங்கள்** |
|---|---|---|
| | பாதுகாப்பு சூழ்நிலையை நிறுவனங்கள் அமைக்க வேண்டும். | |

| | | |
|---|---|---|
| **குழந்தைப் பாதுகாப்புத் தரநிலை 6 - குழந்தைகள் மற்றும் இளவயதினருடன் சேர்ந்து பணியாற்றும் மக்கள் நடைமுறையில் குழந்தைப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வு மதிப்புகளை வெளிப்படுத்துவதற்கு பொருத்தமானவர்களாகவும் ஆதரிப்பவர்களாகவும் இருக்க வேண்டும்.**<br><br>குழந்தைப் பாதுகாப்புத் தரநிலை 6 உடன் இணங்க, நிறுவனம் குறைந்தபட்சம் இவற்றை உறுதிசெய்ய வேண்டும்:<br><br>6.1 வேலைவாய்ப்பு, இதில் விளம்பரம், நடுவர் கண்காணிப்புகள் மற்றும் பணியாளர்கள் & தன்னார்வலர்களுக்கான வேலைவாய்ப்பிற்கு முந்தைய சோதனை, திரையிடல், குழந்தைப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வு முக்கியத்துவம் ஆகியவை அடங்கும்.<br><br>6.2 குழந்தைகளுடன் தற்போது இணைந்து செயல்படும் தொடர்புடைய பணியாளர்கள் & தன்னார்வலர்கள் சரிபார்க்கப்பட வேண்டும் அல்லது தொடர்பான பின்னணிச் சரிபார்ப்புகள் செய்யப்பட வேண்டும்.<br><br>6.3 எல்லாப் பணியாளர்களும் தன்னார்வலர்களும் தகுந்த அறிமுகத்தைப் பெற்றிருக்க வேண்டும் மற்றும் குழந்தைகள், இளவயதினர் தொடர்பான அவர்களின் பொறுப்புகளைத் தெரிந்துகொள்ள வேண்டும், அதாவது பதிவுப் பராமரிப்பு, தகவல் பகிர்வு மற்றும் மற்றும் கடமைகளைத் தெரிவிப்பது போன்றவை.<br><br>6.4 தற்போது செயலில் உள்ள கண்காணிப்பு மற்றும் மக்கள் நிர்வாகமானது குழந்தைப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வின் மீது கவனம் செலுத்த வேண்டும். | தற்போதைய குழந்தைகள் பாதுகாப்பு தரநிலைகளின்படி வேலைவாய்ப்பு மற்றும் தேர்வுக்கான செயல்முறைகள், தகுதிச் சோதனை, கண்காணிப்பு, பயிற்சி, பணியாளர்கள் & தன்னார்வலர்களின் மேம்பாட்டையும் செயல்திறனையும் கண்காணித்தல் ஆகியவற்றுக்கு குழந்தைப் பாதுகாப்புக் கொள்கைகள் மற்றும் செயல்முறைகளை நிறுவனங்கள் கொண்டிருக்க வேண்டும். குழந்தைப் பாதுகாப்புப் பிரச்சனைக்களுக்காக நிறுவனத்தின் புகாரளித்தல் வழிமுறைகளைக் குறித்தும் பணியாளர்களுக்கும் தன்னார்வலர்களுக்கும் தெரியப்படுத்த வேண்டும்.<br><br>புதிய குழந்தைப் பாதுகாப்புத் தரநிலை 6- இன் கீழ், நிறுவனங்கள் பின்வரும் புதிய கடமைகளைப் பற்றி பணியாளர்களுக்கும் தன்னார்வலர்களுக்கும் தெரிவிக்க வேண்டும்:<br>• குழந்தைப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வு தொடர்பான நிறுவனத்தின் பதிவுப் பராமரிப்புச் செயல்முறைகள்<br>• தகவல் பகிர்வு மற்றும் தெரிவுப்புக் கடமைகள். | கமிஷனின் குழந்தைப் பாதுகாப்பு நிறுவனத்தை உருவாக்குவது குறித்த வழிகாட்டியில் குழந்தைகள் பாதுகாப்பை ஆதரிக்கும் பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கான வேலைவாய்ப்பு மற்றும் தேர்வுக்கான செயல்முறைகள், தகுதிச் சோதனை, கண்காணிப்பு, பயிற்சி, பணியாளர்கள் & தன்னார்வலர்களின் மேம்பாட்டையும் செயல்திறனையும் கண்காணித்தல் ஆகியவற்றுக்கான விரிவான வழிகாட்டுதல்கள் உள்ளன.<br><br>ஆஸ்திரேலிய மனித உரிமைகள் ஆணையத்தின் தேசியக் கொள்கை 5 குறித்த மின்-கற்றல் தொகுதியில் பயனுள்ள ஆலோசனை வழங்குகிறது மற்றும் அவற்றைக் குழந்தைப் பாதுகாப்பு நிறுவனங்களின் மின்-கற்றல் தளங்கள் மூலமாகவும் அணுக முடியும். |

| | | |
|---|---|---|
| **குழந்தைப் பாதுகாப்புத் தரநிலை 7 - புகார்கள் மற்றும் சிக்கல்களுக்கான செயல்முறைகள் குழந்தைகள் மீது கவனம் செலுத்தியவையாக இருக்க வேண்டும்**<br><br>குழந்தைப் பாதுகாப்புத் தரநிலை 7 உடன் இணங்க, நிறுவனம் குறைந்தபட்சம் இவற்றை உறுதிசெய்ய வேண்டும்:<br><br>7.1 நிறுவனம் அணுகத்தக்கதாகவும், குழந்தைகள் தொடர்பான புகாரைக் கையாளுதல் கொள்கையைக் கொண்டதாகவும் இருக்க வேண்டும். இந்தக் கொள்கையில் தலைமை, பணியாளர்கள், தன்னார்வலர்கள் ஆகியோரின் பங்குகள் மற்றும் பொறுப்புகள், வெவ்வேறு வகை புகார்களைக் கையாளுதலுக்கான முறைகள், தொடர்புடைய கொள்கைகள்/நடத்தை விதித் தொகுப்பு மற்றும் கடமைகள் மீறல்கள் ஆகியவற்றுக்குப் பதிலளித்து புகாரளிப்பது ஆகியவை குறித்த தெளிவான வழிகாட்டுதல்கள் இருக்க வேண்டும்.<br><br>7.2 பயனுள்ள புகார்களைக் கையாளுதல் செயல்முறைகள் குழந்தைகள், இளவயதினர், அவர்களின் குடும்பத்தினர், பணியாளர்கள், தன்னார்வலர்கள் ஆகியோர் புரிந்துகொள்ள வேண்டும் மற்றும் கலாச்சாரரீதியாகப் பாதுகாப்பான ஒன்றாக இருக்க வேண்டும்.<br><br>7.3 புகார்களைத் தீவிரமாக எடுத்துக்கொண்டு, உடனடியாகவும் முழுமையாகவும் அவற்றுக்குப் பதிலளிக்க வேண்டும்.<br><br>7.4 சட்டரீதியான புகாரளிப்பு தேவைப்படவில்லை என்றாலும் சரி, சட்ட அமலாக்கத்துடன் இணைந்து செயல்பட வேண்டிய நிலை வந்தாலும் சரி நிறுவனத்தின் கொள்கைகளும் செயல்முறைகளும், தொடர்புடைய அதிகாரிகளிடம் புகார்களையும் சிக்கல்களையும் புகாரளிக்கும் விதமாக இருக்க வேண்டும்.<br><br>7.5 சட்ட அமலாக்கத்துடன் இணைந்து செயல்பட வேண்டும்<br>புகாரளித்தல், தனியுரிமை, வேலைவாய்ப்புச் சட்டக் கடமைகளை நிறைவேற்ற வேண்டும். | தற்போதைய குழந்தைப் பாதுகாப்புத் தரநிலைகள் நிறுவனங்கள் மற்றும் இளவயதினர் தொடர்பான புகார்களை எழுப்புவதற்கு ஆதரவளிக்கும் பயனுள்ள செயல்முறைகளைக் கொண்டிருக்க வேண்டும், மேலும் சந்தேகத்திற்குரிய குழந்தைகள் துஷ்பிரயோகத்திற்கு நிறுவனம் சரியான முறையில் பதிலளிக்கவும் புகாரளிக்கவும் வேண்டும்.<br><br>புதிய குழந்தைப் பாதுகாப்புத் தரநிலை 7-இல் பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கு கூடுதலாக, குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரும் குழந்தைகளை மையமாகக் கொண்ட புகார்கள் செயல்முறைகளின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்வது குறித்து வலியுறுத்தப்பட்டுள்ளது.<br><br>புதிய குழந்தைப் பாதுகாப்புத் தரநிலை 7-இல் நிறுவனங்களுக்கான கடமைகள் தெளிவாகக் கொடுக்கப்பட்டுள்ளன:<br>• புகார்களைத் தீவிரமாக எடுத்துக்கொண்டு, உடனடியாகவும் முழுமையாகவும் அவற்றுக்குப் பதிலளிக்க வேண்டும்<br>• சட்ட அமலாக்கத்துடன் இணைந்து செயல்பட வேண்டும்<br>• புகாரளித்தல், தனியுரிமை, வேலைவாய்ப்புச் சட்டக் கடமைகளை நிறைவேற்ற வேண்டும். | கமிஷனின் குழந்தைப் பாதுகாப்பு நிறுவனத்தை உருவாக்குவது குறித்த வழிகாட்டியில் புகாரளித்தலுக்கான கொள்கைகள் மற்றும் செயல்முறைகள் தொடர்பான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது. கமிஷனின் வலைத்தளத்தில் இந்தத் திட்டத்திற்கு உட்பட்ட நிறுவனங்களுக்கான புகாரளிக்கத்தக்க நடத்தைத் திட்டம் குறித்த வழிகாட்டுதல்கள் உள்ளன.<br><br>குழந்தைப் பாதுகாப்பிற்கான தேசிய அலுவலகம் குழந்தைகளை மையமாகக் கொண்ட மற்றும் அணுகத்தக்க புகார்கள் செயல்முறைகளை உருவாக்குவதற்கான ஆதாரங்களை வெளியிட்டுள்ளது.<br><br>ஆஸ்திரேலிய மனித உரிமைகள் ஆணையத்தின் தேசியக் கொள்கை 6 குறித்த மின்-கற்றல் தொகுதியில் பயனுள்ள ஆலோசனை வழங்குகிறது மற்றும் அவற்றைக் குழந்தைப் பாதுகாப்பு நிறுவனங்களின் மின்-கற்றல் தளங்கள் மூலமாகவும் அணுக முடியும். |

| | | |
|---|---|---|
| **குழந்தைப் பாதுகாப்புத் தரநிலை 8 - நடப்புக் கல்வி மற்றும் பயிற்சியின் மூலம் குழந்தைகள் மற்றும் இளவயதினரைப் பாதுகாப்பாக வைத்திருக்க பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்கள் அதற்கான கல்வியறிவு, திறன்கள் மற்றும் விழிப்புணர்வைப் பெற்றிருக்க வேண்டும்.**<br><br>குழந்தைப் பாதுகாப்புத் தரநிலை 8 உடன் இணங்க, நிறுவனம் குறைந்தபட்சம் இவற்றை உறுதிசெய்ய வேண்டும்:<br><br>8.1 நிறுவனத்தின் குழந்தைப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக் கொள்கையை திறம்பட செயல்படுத்தும்வகையில் பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்கள் பயிற்சி மற்றும் ஆதரவு அளிக்கப்பட வேண்டும்.<br><br>8.2 பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்கள் பிற குழந்தைகள் மற்றும் இளவயதினரால் ஏற்படும் தீங்கு உட்பட குழந்தைகளின் தீங்கு குறித்த அறிகுறிகளை அடையாளம் காணும்வகையில் பயிற்சி மற்றும் தகவல்களைப் பெற வேண்டும்.<br><br>8.3 குழந்தைப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வு தொடர்பான பிரச்சினைகளுக்கு திறம்பட பதிலளிப்பதற்கும், தீங்கை வெளிப்படுத்தும் சக ஊழியர்களுக்கு ஆதரவளிப்பதற்கும் பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்களுக்குப் பயிற்சி மற்றும் தகவல்களை வழங்க வேண்டும்.<br><br>8.4 குழந்தைகள் மற்றும் இளவயதினருக்கு கலாச்சாரரீதியாக பாதுகாப்பான சூழலை எவ்வாறு உருவாக்குவது என்பது குறித்த பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்களுக்குப் பயிற்சி மற்றும் தகவல்களை வழங்க வேண்டும். | தற்போதைய குழந்தைப் பாதுகாப்புத் தரநிலைகளின்படி நிறுவனங்கள் பணியாளர்களுக்கும் தன்னார்வலர்களுக்கும் தகவல்களையும் பயிற்சியையும் வழங்க வேண்டும், இதன் மூலம் அவர்கள் குழந்தைகளுக்குப் பாதுகாப்பான சூழலை உருவாக்கி துஷ்பிரயோகக் குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்க முடியும்.<br><br>புதிய குழந்தைப் பாதுகாப்புத் தரநிலை 8 பணியாளர்களுக்கும் தன்னார்வலர்களுக்கும் பயிற்சியளிப்பதற்கும் ஆதரவளிப்பதற்கும் நிறுவனங்களுக்கான கடமைகளை விவரிக்கிறது, மேலும் இவற்றுக்கான நடப்புக் கல்வி மற்றும் பயிற்சியையும் வழங்குகிறது:<br>• நிறுவனத்தின் குழந்தைப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக் கொள்கையை செயல்படுத்துதல்<br>• தீங்குக்கான அறிகுறிகளை அடையாளங்காணுதல் (மற்ற குழந்தைகள் மற்றும் இளவயதினரால் ஏற்படும் தீங்கு உட்பட)<br>• குழந்தைப் பாதுகாப்புப் பிரச்சினைகள் மற்றும் சிக்கல்களுக்குத் திறம்பட பதிலளித்தல் மற்றும் தீங்கைப் பற்றி புகாரளிக்கும் சக ஊழியர்களை ஆதரித்தல்.<br><br>இந்தத் தரநிலையானது புதிய தரநிலைகள் 1 மற்றும் 5 உடன் தொடர்புடையதாகும், மூன்று தரநிலைகளும் குழந்தைகள் மற்றும் இளவயதினருக்கு பாதுகாப்பான சூழலை உருவாக்குவது குறித்து பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கு பயிற்சி மற்றும் தகவல்களை வழங்கும் கடமைகளை நிறுவனங்களுக்கு முன்வைக்கின்றன. | கமிஷனின் குழந்தைப் பாதுகாப்பு நிறுவனத்தை உருவாக்குவது குறித்த வழிகாட்டியில் குழந்தைகள் மற்றும் இளவயதினரைப் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கு பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்களுக்குத் தேவைப்படும் கல்வி அறிவு, திறன்கள் மற்றும் விழிப்புணர்வு பற்றிய சில தகவல்கள் உள்ளன. கமிஷனின் வலைத்தளத்தில் இந்தத் திட்டத்திற்கு உட்பட்ட நிறுவனங்களுக்கான புகாரளிக்கத்தக்க நடத்தைத் திட்டம் குறித்த வழிகாட்டுதல்கள் உள்ளன.<br><br>கல்வி மற்றும் பயிற்சித் துறையின் பள்ளிகளுக்கான வழிகாட்டியில் தவறாகப் பயன்படுத்துவது பற்றிய பயனுள்ள தகவல்கள் உள்ளன.<br><br>ஆஸ்திரேலிய மனித உரிமைகள் ஆணையத்தின் தேசியக் கொள்கை 7 குறித்த மின்-கற்றல் தொகுதியில் பயனுள்ள ஆலோசனை வழங்குகிறது மற்றும் அவற்றைக் குழந்தைப் பாதுகாப்பு நிறுவனங்களின் மின்-கற்றல் தளங்கள் மூலமாகவும் அணுக முடியும். |

| புதிய குழந்தைப் பாதுகாப்புத் தரநிலைகள் (ஜூலை 1, 2022 முதல் நடைமுறைக்கு வருகிறது) | புதியவை என்ன அல்லது என்ன மாற்றப்பட்டுள்ளது? | பயனுள்ள ஆதாரங்கள் |
| --- | --- | --- |
| **குழந்தைப் பாதுகாப்புத் தரநிலை 9 - குழந்தைகள் மற்றும் இளவயதினருக்குத் தீங்கு விளைவிக்கும் வாய்ப்பைக் குறைக்கும் அதே வேளையில் உடல் ரீதியான மற்றும் இணைய சூழல்களின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வையும் மேம்படுத்த வேண்டும்.**<br><br>குழந்தைப் பாதுகாப்புத் தரநிலை 9 உடன் இணங்க, நிறுவனம் குறைந்தபட்சம் இவற்றை உறுதிசெய்ய வேண்டும்:<br><br>9.1 குழந்தைகளின் தனியுரிமை, தகவல் அணுகல், சமூக இணைப்புகள் மற்றும் கற்றல் வாய்ப்புகள் ஆகியவற்றில் சமரசம் செய்யாமல் இணையம் மற்றும் நிகழ்நேரச் சூழல்களில் ஏற்படும் அபாயங்களை பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்கள் கண்டறிந்து குறைக்க வேண்டும்.<br><br>9.2 நிறுவனத்தின் நடத்தை விதித் தொகுப்பு, குழந்தைப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக் கொள்கை மற்றும் நடைமுறைகளுக்கு ஏற்ப இணைய சூழல் பயன்படுத்தப்பட வேண்டும்.<br><br>9.3 நிறுவன அமைப்புகள், செயல்பாடுகள் மற்றும் நிகழ்நேர சூழலில் ஏற்படும் அபாயங்களை இடர் மேலாண்மை திட்டங்கள் கருத்தில்கொள்ள வேண்டும்.<br><br>9.4 மூன்றாம் தரப்பினரிடமிருந்து ஒப்பந்த வசதிகள் மற்றும் சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் குழந்தைகள் மற்றும் இளவயதினரின் பாதுகாப்பை உறுதி செய்யும்வகையில் கொள்முதல் கொள்கைகளை மேற்கொள்ள வேண்டும். | தற்போதைய குழந்தைப் பாதுகாப்புத் தரநிலைகளின்படி ஏற்கெனவே பின்பற்றியவாறே நிறுவனங்கள் நிகழ்நேரம் மற்றும் இணைய சூழல்களுடன் தொடர்புடைய அபாயங்கள் குறித்து கவனமாக இருக்க வேண்டும் மற்றும் குழந்தைகள் துஷ்பிரயோகத்தின் அபாயங்களை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.<br><br>புதிய குழந்தைப் பாதுகாப்புத் தரநிலை 9-இல் நிறுவனங்களுக்கான குறிப்பிட்ட கடமைகளைக் கொடுக்கப்பட்டுள்ளன:<br>• நிகழ்நேரச் சூழல்களுக்கு கூடுதலாக இணைய சூழல்களைக் கவனித்தல்<br>• தனியுரிமை, தகவல் அணுகல், சமூக இணைப்புகள் மற்றும் கற்றல் வாய்ப்புகளை ஆகியவற்றுக்கான குழந்தை அல்லது இளவயதினரின் உரிமையைச் சமரசம் செய்யாமல் இந்தச் சூழல்களில் ஏற்படும் அபாயங்களைக் கண்டறிந்து குறைத்தல்<br>• குழந்தைப் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துவதோடு, குழந்தைகள் மற்றும் இளவயதினருக்குத் தீங்கு விளைவிக்கும் வாய்ப்புகளை குறைத்தல்<br>• மூன்றாம் தரப்பினரிடமிருந்து வசதிகள் மற்றும் சேவைகளை நிறுவனம் ஒப்பந்தம் செய்தால் குழந்தைகள் மற்றும் இளவயதினரின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் கொள்முதல் கொள்கைகளைக் கொண்டிருத்தல். | கமிஷனின் குழந்தைப் பாதுகாப்பு நிறுவனத்தை உருவாக்குவது குறித்த வழிகாட்டியில் துஷ்பிரயோகத்தின் அபாயங்களைக் கண்டறிந்து குறைப்பதற்கான ஆலோசனைகள் உள்ளன.<br><br>கமிஷனின் COVID-19 தொற்றுக்காலத்தின் போது குழந்தைகள் மற்றும் இளவயதினரை இணையத்தில் பாதுகாப்பாக வைத்திருத்தல் என்பதில் பயனுள்ள உதவிக்குறிப்புகள் மற்றும் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது.<br><br>மின்-பாதுகாப்பு கமிஷனர் இணையத்தில் குழந்தைகளை பாதுகாப்பாக வைத்திருப்பது குறித்த விரிவான நடைமுறை ஆலோசனைகளை வழங்குகிறது.<br><br>ஆஸ்திரேலிய மனித உரிமைகள் ஆணையத்தின் ஆன்லைன் பாதுகாப்பிற்கான சரிபார்ப்புப் பட்டியல் மற்றும் தேசியக் கொள்கை 8 குறித்த மின்-கற்றல் தொகுதியில் பயனுள்ள ஆலோசனை வழங்குகிறது மற்றும் அவற்றைக் குழந்தைப் பாதுகாப்பு நிறுவனங்களின் மின்-கற்றல் தளங்கள் மூலமாகவும் அணுக முடியும். |

| புதிய குழந்தைப் பாதுகாப்புத் தரநிலைகள் (ஜூலை 1, 2022 முதல் நடைமுறைக்கு வருகிறது) | புதியவை என்ன அல்லது என்ன மாற்றப்பட்டுள்ளது? | பயனுள்ள ஆதாரங்கள் |
|---|---|---|
| **குழந்தைப் பாதுகாப்புத் தரநிலை 10 - குழந்தைப் பாதுகாப்புத் தரநிலைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்ந்து மதிப்பாய்வு செய்யப்பட்டு மேம்படுத்தப்பட வேண்டும்**<br>குழந்தைப் பாதுகாப்புத் தரநிலை 10 உடன் இணங்க, நிறுவனம் குறைந்தபட்சம் இவற்றை உறுதிசெய்ய வேண்டும்:<br>10.1 குழந்தைப் பாதுகாப்பு நடைமுறைகளை நிறுவனம் தொடர்ந்து மதிப்பாய்வு செய்து கணக்கிட வேண்டும் மற்றும் மேம்படுத்த வேண்டும்.<br>10.2 தொடர்ச்சியான முன்னேற்றத்தைத் தெரிவிக்க காரணங்கள் மற்றும் முறையான தோல்விகளை அடையாளம் காண புகார்கள் சம்பந்தப்பட்ட மற்றும் பாதுகாப்பு சம்பவங்கள் பகுப்பாய்வு செய்யப்பட வேண்டும்.<br>10.3 பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்கள், சமூகம் மற்றும் குடும்பங்கள் மற்றும் குழந்தைகள் மற்றும் இளவயதினர் ஆகியோருக்கு, பொருத்தமான மதிப்பீடுகளில் கிடைத்த முடிவுகள் குறித்து நிறுவனம் தெரிவிக்க வேண்டும். | மதிப்பாய்வு மற்றும் தொடர்ச்சியான முன்னேற்றம் ஏற்கனவே தற்போதைய குழந்தைப் பாதுகாப்புத் தரநிலைகளின் ஒரு பகுதியாகும்.<br>புதிய குழந்தைப் பாதுகாப்புத் தரநிலை 10-இல் நிறுவனங்களுக்கான புதிய கடமைகள் கொடுக்கப்பட்டுள்ளன:<br>• தொடர்ச்சியான முன்னேற்றத்தைத் தெரிவிக்க காரணங்கள் மற்றும் முறையான தோல்விகளை அடையாளம் காண புகார்கள், கவலைகள் மற்றும் பாதுகாப்புச் சம்பவங்களை பகுப்பாய்வு செய்தல்.<br>• பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்கள், சமூகம் மற்றும் குடும்பங்கள் மற்றும் குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் ஆகியோருக்கு குழந்தைகள் பாதுகாப்பு நடைமுறைகளின் பொருத்தமான மதிப்பீடுகளில் கிடைத்த முடிவுகள் பற்றி தெரிவித்தல். | கமிஷனின் குழந்தைப் பாதுகாப்பு நிறுவனத்தை உருவாக்குவது குறித்த வழிகாட்டியில் (Word கோப்பு ஆகவும் கிடைக்கிறது) தற்போதைய குழந்தைப் பாதுகாப்புத் தரநிலைகளின்படி தங்கள் குழந்தைப் பாதுகாப்பு கட்டமைப்பை மதிப்பாய்வு செய்ய நிறுவனங்களுக்கு உதவ சுய மதிப்பீட்டு கருவியை வழங்குகிறது. புதிய குழந்தைப் பாதுகாப்புத் தரநிலைகளின்படி மதிப்பீடுகளை ஆதரிக்கும் புதிய கருவி வெளியிடப்படும்.<br>ஆஸ்திரேலிய மனித உரிமைகள் ஆணையத்தின் தேசியக் கொள்கை 9 குறித்த மின்-கற்றல் தொகுதியில் பயனுள்ள ஆலோசனை வழங்குகிறது மற்றும் அவற்றைக் குழந்தைப் பாதுகாப்பு நிறுவனங்களின் மின்-கற்றல் தளங்கள் மூலமாகவும் அணுக முடியும். |

| புதிய குழந்தைப் பாதுகாப்புத் தரநிலைகள் (ஜூலை 1, 2022 முதல் நடைமுறைக்கு வருகிறது) | புதியவை என்ன அல்லது என்ன மாற்றப்பட்டுள்ளது? | பயனுள்ள ஆதாரங்கள் |
|---|---|---|
| **குழந்தைப் பாதுகாப்புத் தரநிலை 11 - குழந்தைகள் மற்றும் இளவயதினருக்கு நிறுவனம் பாதுகாப்பானது என்பதை விவரிக்கும்வகையில் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை ஆவணப்படுத்த வேண்டும்.**<br>குழந்தைப் பாதுகாப்புத் தரநிலை 11 உடன் இணங்க, நிறுவனம் குறைந்தபட்சம் இவற்றை உறுதிசெய்ய வேண்டும்:<br>11.1 கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் குழந்தைப் பாதுகாப்புத் தரநிலைகள் அனைத்தையும் பூர்த்திசெய்ய வேண்டும்.<br>11.2 கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் ஆவணப்படுத்தப்பட்டு புரிந்துகொள்வதற்கு எளிதாக இருக்க வேண்டும்.<br>11.3 கொள்கைகள் மற்றும் நடைமுறைகளின் வளர்ச்சியை சிறந்த நடைமுறை மாதிரிகள் மற்றும் பங்குதாரரின் ஆலோசனையைப் பெற வேண்டும்.<br>11.4 கொள்கைகள் மற்றும் நடைமுறைகளுடன் தலைவர்கள் சாம்பியன் மற்றும் மாதிரி உடன்பட வேண்டும்.<br>11.5 பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்கள் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளைப் புரிந்துகொண்டு செயல்பட வேண்டும். | குழந்தைப் பாதுகாப்பிற்கான நடைமுறைகளை செயல்படுத்துவதற்கு விரிவான கொள்கைகள் மற்றும் நடைமுறைகளைத் தயாரிப்பது தற்போதைய குழந்தைப் பாதுகாப்புத் தரநிலைகளுக்கு ஏற்கனவே தேவைப்படுகிறது.<br>புதிய குழந்தைப் பாதுகாப்புத் தரநிலை 11-இல் நிறுவனங்களுக்கான புதிய கடமைகள் கொடுக்கப்பட்டுள்ளன:<br>• கொள்கைகளையும் நடைமுறைகளையும் புரிந்துகொள்வதற்கு எளிமையாக்குதல்<br>• கொள்கைகள் மற்றும் நடைமுறைகளின் வளர்ச்சியைத் தெரிவிக்க பங்குதாரர் ஆலோசனை மற்றும் சிறந்த நடைமுறை மாதிரிகளைப் பயன்படுத்துதல்<br>• கொள்கைகள் மற்றும் நடைமுறைகளுடன் நிறுவன தலைவர்கள் சாம்பியன் மற்றும் மாடல் உடன்படுவதை உறுதிப்படுத்துதல். | தற்போதைய தரநிலை 2-இன் பிரிவில் உள்ள கமிஷனின் குழந்தைப் பாதுகாப்பு நிறுவனத்தை உருவாக்குவது குறித்த வழிகாட்டியில் மாதிரிக் கொள்கைகளும் பயனுள்ள வழிகாட்டுதலும் வழங்கப்பட்டுள்ளன.<br>ஆஸ்திரேலிய மனித உரிமைகள் ஆணையத்தின் தேசியக் கொள்கை 10 குறித்த மின்-கற்றல் தொகுதியில் பயனுள்ள ஆலோசனை வழங்குகிறது மற்றும் அவற்றைக் குழந்தைப் பாதுகாப்பு நிறுவனங்களின் மின்-கற்றல் தளங்கள் மூலமாகவும் அணுக முடியும். |